# காலத்தை வென்ற காவியத்தில் குரவைக்கூத்து

8

**முனைவர் லொ.ஆ. உமாமகேஸ்வரி**
**உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை.**
**அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி**
**பெரும்பாக்கம், சென்னை 600131.**
E-mail:umaloddia@gmail.com

புனைகதை அல்லது புனைவு என்பது உண்மை அல்லாத கதைகளைக் குறிக்கும் எனினும் முழுமையான கற்பனையின் அடிப்படையில் இருக்க வேண்டுமென்பதில்லை. புனை கதையில் இடம்பெறும் மாந்தர், நிகழ்ச்சிகள், கதை நடைபெறும் இடம் என பல கூறுகள் உண்மையை அடியொற்றி அமையலாம். வாசிக்கும் வாசகனின் சிந்தை கதையுடன் நடைபயில இப்போக்கு உதவும்.

காலத்தை வென்ற காவியமான பொன்னியின் செல்வன் புதினம் ஆண்டு பல கடந்த பின்னும் நிலைத்து நிற்பது கல்கி அவர்களின் நடையால், அவர் கையாண்டுள்ள கதைக் கரு, பாத்திரப்படைப்பு, கண் முன்னே விரித்துரைக்கும் இடங்கள், புதினத்தில் இடம்பெறும் இலக்கியம் சார் செய்திகள், இலக்கியம் சார்ந்து எழுதப்பட்டுள்ள தமிழரின் பண்பாட்டு மரபுகள் எனக் கூறிக்கொண்டே செல்லலாம்.

பொன்னியின் செல்வன் முதல் பகுதியில் இடம்பெற்றுள்ள தமிழரின் பண்பாடு சார்ந்த “குரவைக் கூத்து” மற்றும் “வேலன் வெறியாடல்” பகுதியினை தமிழ் இலக்கியப் பகுதிகளுடன் பொருத்தி ஆய்வது நோக்கமாகக் கொண்டு இக்கட்டுரை அமைகின்றது.

புனை கதையாக இருப்பினும் வரலாற்று பதிவுகளோடு திணை சார்ந்த பண்டைத் தமிழரின் இனக்குழு வாழ்வியல் பண்பாட்டுக் கூறுகள், மரபுசார் செய்திகள் என கட்டமைக்கப்பட்டுள்ள இப்புதினத்தை வெறும் வரலாற்றுப் புனைவாகக் காணாமல் அதில் பொதிந்துள்ள நுண்ணிய செய்திகளை வெளிக்கொண்டு வருவது **ஆய்வின் தேவையாகக்** கருதப்படுகிறது.

இக்கட்டுரை வழி இனிவரும் இளைய தலைமுறையினர் அக்கால மக்களின் வாழ்வியலை அறிந்து கொள்வர் என்பதும், புனைவாக எழுதப்பட்ட இப்புதினம் காலத்தை வென்ற காவியமாக ஏன் இன்றுவரை பேசப்படுகிறது என்பதை அறிந்து கொள்வர் என்பதும் கட்டுரையின் **பயனாகக்** கொள்ளப்பட்டுள்ளன.

**கருதுகோள்**:

தமிழரின் வாழ்வியலில் பின்னிப்பிணைந்த குரவைக் கூத்து மரபு மாறாமல் இப்புதினத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது என்பது கட்டுரையின் கருதுகோளாகும். கட்டுரையின் சுருக்கம் கருதி குரவைக்கூத்து விரிவாகவும், அதையொட்டி இடம்பெற்றுள்ள வேலன் வெறியாட்டு நிகழ்ச்சி சுருக்கமாகவும் அமைகின்றன.

**கூத்தின் தோற்றுவாய்**:

மோனத்து இருந்த முன்னோன் கூத்தில்
உடுக்கையில் பிறந்தது ஓசையின் சுழலே
ஓசையில் பிறந்தது இசையின் உயிர்ப்பே
இசையில் பிறந்தது ஆட்டத்து இயல்பே
ஆட்டம் பிறந்தது கூத்தினது அமைவே
கூத்தில் பிறந்தது நாட்டியக் கோப்பே
நாட்டியம் பிறந்தது நாடக வகையே (கூத்த நூல்: நூற்பா-1 ப - 15)

அநாதி முதல்வனாம் ஆண்டவன் கூத்தில் அவன் வலது கையில் உள்ள உடுக்கையின் ஓசை சுழல, அதன் காரணமாக எழுந்த இசை, இசையின் இயக்கமான ஆட்டம், ஆட்டத்தின் இயல்பில் இருந்து தோன்றிய கூத்தின் அமைப்பு, நாட்டியக் கோவையில் இருந்து தோன்றிய பற்பல நாடக வகைகளின் தோற்றுவாயினை கூத்த நூல் சிறப்பாக கூறுகிறது.

பொன்னியின் செல்வன் புதினத்தில் குரவைக்கூத்து என்னும் பகுதி பண்டைய கால இலக்கியங்கள் சுட்டியுள்ள வழமையிலிருந்து சற்றும் மாறாத வகையில் படைக்கப்பட்டுள்ளது.குரவை நடைபெறும் சூழல், இசைக்கருவிகள், கூத்து நடைபெறும் மேடை, அதன் அமைப்பு, குரவையாடிய மகளிர், புனைவுகள், குரவையாடல் அதைத்தொடர்ந்து இடம்பெற்றுள்ள “வேலன் வெறியாட்டு” நிகழ்ச்சி என ஒவ்வொன்றும் இலக்கியம் சுட்டிய முறைமையில் படைக்கப்பட்டிருப்பது புதினத்திற்கு உயிரோட்டத்தைத் தருகிறது.

**குரவையும் சங்க இலக்கியமும்**:

“குரவை ஒருவகை கூத்தின் விகற்பம். இஃது எழுவர் மங்கையர் கைகோர்த்து ஆடுவதாம் என்கிறது” அபிதான சிந்தாமணி (ப - 579). “கூடி ஆடுவது கூத்து”. கூத்து என்பது கதை தழுவி எடுக்கப்பட்டது எனக்கூறி எடுத்துக்காட்டாக “குரவை கூத்தினை” எடுத்துரைக்கிறது பஞ்ச மரபு என்னும் நூல் (பஞ்சமரபு ப - 24). அத்துடன் கூத்து மரபு என்னும் பகுதியில்

“அரிய திருத்தாண்டவம் நிருத்த நாட்டியம்
குரவை வரி கோலம் வகைக் கூத்தேழ்” (நூற்பா: 128 ப -355)

என ஏழ் கூத்தினையும் கூறுகிறது.

சங்க இலக்கியத்தில் குரவைக் கூத்து தொடர்பான செய்திகள் இடம் பெற்றுள்ளதைச் சுருக்கமாக காணலாம்.அகத்திணையில் குரவை காதல் பொருட்டும். புறத்திணையில் வெற்றியின் பொருட்டும் ஆடியமைக்கான பதிவுகள் பரவலாகக் காணக்கிடைக்கின்றன. இக்கூத்து வழி திணைசார் தெய்வங்களும் போற்றப்பட்டுள்ளமையைக் காணமுடிகிறது.

வரை உறைதெய்வம் உவப்ப உவந்து
குரவை தழீஇ யாம் ஆட குரவையுள்
கொண்டு நிலை பாடிக் காண். (கலி: 39: 27)

குறிஞ்சி நில மக்கள் மகிழ்ச்சியின் வெளிப்பாடாகக் குரவையாடினமையைப் பல சங்கப் பாடல்கள் நமக்கு உணர்த்தும். (“(...குறவர் மனைமுதிர் மகளிரோடு குரவை தூங்கும் ஆர்கலி

விழாக்களம் கடுப்ப...") (அகம்: 232:10) "மான் தோல் சிறு பறை கறங்க கல்லென / வான்தோய் மீமிசை அயரும் குரவை" (மலைபடு: 320:22))

முல்லை நில மக்கள் ஏறு தழுவும் பொழுது குரவையாடினர் என்பதை கலித்தொகைப் பாடல் வழி அறியலாம் (கலி: 102, 103,108).

மருத நில மகளிர் தேறல் மாந்தி குரவையாடினர் (அகம்: 336), அதேபோல் நெய்தல் நில மக்கள் (குறு: 294, அகம்: 20, ஐங்: 181) பாலை நில மக்கள் (அகம்: 269) குரவையாடி மகிழ்ந்தனர் என்பதன் வழி பண்டைக்காலம் தொட்டு குரவை சங்கத்தமிழரின் வாழ்வியலுடன் இணைந்து வருவதை அறிந்து கொள்ளலாம்.

**குரவையாடும் சூழல்**:

சங்க காலத்தில் குரவை போர் மற்றும் அமைதியான சூழலிலும் ஆடப்பட்டுள்ளது. போர்க்காலங்களில் ஆடும் குரவை வீரம், கோபம் மிகுந்து காணப்படும் என்பதை

"....மிசை இலங்கு உளைய பனைப் போழ் செரிஇச்
சின மாந்தர் வெறிக் குரவை " (புறம்: 25:22)

என்னும் பாடல் வரியும், அமைதியான சூழலில் ஆடியதை

"...தண்குரவை சீர் தூங்குந்து " (புறம் 24: 6)

என்னும் பாடல் வரியும் உணர்த்துகின்றன.

சங்க காலத்திற்குப் பின் சிலப்பதிகாரக் காலத்தில் குரவை குன்றக்குரவை ஆய்ச்சியர் குரவையாக ஏற்றம் பெற்றதையும், தீங்கு நிகழுமோ எனும் அச்சம் தோன்றிய காலத்தில் (குடத்துப் பால் உறையாமை, இமிலேறு கண்ணீர் சொரிதல் உள்ளிட்டவை). (சிலம்பு ஆய்ச்சியர் குரவை: 5-6) குரவையாடியதை அறிய இயல்கிறது.

பொன்னியின் செல்வன் புதினத்தில் ஓர் அசாதாரணமான சூழலில் கடம்பூர் மாளிகையில் குரவைக்கூத்து நிகழ்த்தப்பட்டதாக ஆசிரியர் கட்டமைக்கிறார் .சோழவாரிசு குறித்து முடிவெடுக்க பழுவேட்டரையர் உள்ளிட்ட சிற்றரசர்கள் ஒன்று கூடி ஆலோசனை செய்ய உள்ள சூழலில், இக்குரவை கூத்தும் வேலன் வெறியாடலும் பின் நடைபெற உள்ள கதைக்கு வலு சேர்ப்பதாகவும் ஆர்வத்தை தூண்டுவதாகவும் அமைகின்றன.

**குரவையும் இசைக் கருவிகளும்**:

குரவைக்கூத்தாடும் பொழுது பல்வேறு இசைக் கருவிகளையும் அக்கால மக்கள் பயன்படுத்தியுள்ளனர்.

"தண்ணுமைப் பாணி தளராது எழூஉக
பண் அமை இன்சீர்க் குரவையுள்..." (கலி:102-35)

திருமண விழாவுக்கான தண்ணுமை முரசு முழங்க அம்முழக்கத்துடன் குரவையாடிய பதிவு கலித்தொகையில் கிட்டுகிறது. குரவையாடும் பொழுது தொண்டகச் சிறு பறை முழக்கியதை திருமுருகாற்றுப் படையும் (196 -197), மலையில் வாழும் குறவர் குரவையாடும் பொழுது பறையொலி எழுப்பியதை மலைபடுகடாமும் (320- 322) பதிவு செய்துள்ளன.

சிலப்பதிகார அரங்கேற்று காதையில் இடம் பெற்றுள்ள பல்வேறு இசைக்கருவிகளின் திறத்தினை அடியார்க்கு நல்லார் உரை வழி அறியலாம்.

ஊதும் காற்றைப் பலவிதமான அதிர்வுக்குள்ளாக்கி அதன் வாயிலாக எழும் ஒலியை முறைப்படுத்தி இன்னிசையாகப் பொழிய வைக்கக் குழல் பயன்பட்டமை; மற்றும் மத்தளம், தண்ணுமை, இடக்கை, சல்லிகை பயன்படுத்தியுள்ளமை; “பேரிகை, படகமிடக்கையுடுக்கை, சீர்மிகு மத்தளஞ் **சல்லிகை, கரடிகை**, திமிலை குடமுழாத்தக்கை கணப்பறை, தமருகந் தண்ணுமை, தாவி தடாரி, அந்தரி முழவொடு... துடிபெரும் பறையென மிக்க நூலோர் விரித்துரைத்தனரே“ (சிலம்பு: அடியார்க்கு நல்லார் உரை, ப - 105) என்றும்,

சல்லிகை என்றது சல்லென்ற ஓசையையுடைத்தாதலாற் பெற்ற பெயர்; கரடி கத்தினாற் போலும் ஓசையையுடைத்தாதலாற் கரடிகையென்றும் பெயராயிற்று (சிலம்பு பக்கம் 106) என்றும் அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரம் அரங்கேற்று காதைக்கு உரை எழுதுங்கால் விளக்கி உரைக்கிறார்.

“தாளம் தண்ணுமை தழுவிய குழல் யாழ்
இழும் எனப்பயில்வது இசை, இசைப் புணர்ச்சி” (கூத்த நூல்: நூற்பா 145 பக்கம் 127)

மற்றும் நூற்பா-146-இல் கூத்துக்குப் பயன்படும் இசைக்கருவிகளை கூத்தநூல் பட்டியலிடுகிறது.

இம்முறையினின்றும் சற்றும் வழுவாமல் குரவைக்கூத்தில் சல்லி, கரடி, பறை, புல்லாங்குழல், உடுக்கை ஆகிய இசைக்கருவிகள் சேர்ந்து சப்தமிட்டதையும் “வாத்தியக்காரர்கள் மேடைக்கு எதிரிலும் பக்கங்களிலும் அமர்ந்து அவரவர்களுடைய வாத்தியங்களை ஆவேசமாக முழக்கினார்கள், மலர்மணம், அகில் மணம், வாத்திய முழக்கம் எல்லாம் சேர்ந்து வந்தியத்தேவனுடைய தலை சுற்றும் படிச்செய்தன என விவரிக்கிறார் கல்கி. (பொன்னியின் செல்வன்: முதல் பகுதி ப-15).

**குரவையாடும் மகளிரும், புனைவுகளும்:**

குரவை என்பது காமமும் வென்றியும் பொருளாக மகளிர் எழுவரேனும், எண்மரேனும், ஒன்பதின்மரேனும் கை பிணைத்து ஆடுவது.

“குரவையென்பது கூறுங் காலைச்
செய்தோர் செய்த காமமும் விறலும்
எய்தவுரைக்கு மியல்பிற் றென்ப
குரவை யென்ப தெழுவர் மங்கையர்
செழுநிலை மண்டலக் கடகக்கை கோத்
தந்நிலை கொப்ப நின்றாடலாகும்” (அடியார்க்கு நல்லார் உரைத்திறன்: ப -189)

என்கிறார். திருமுருகாற்றுப்படையில் மகளிர் குரவையாடும் பொழுது காட்டிலும், சுனையிலும் பூத்த பூமாலைக் கண்ணியைத் தலையில் சூடிக்கொண்டிருந்தனர். அணைத்து பின்னிய அவர்களது கூந்தலானது பூங்கோதை இணைத்துப் பின்னப்பட்டிருந்தது. குல்லாத்தழை பூத்திருக்கும் வெண் கடம்பு, மரத்தளிர், மாந்தழை ஆகியவற்றைச் சேர்த்து கட்டிய தழையாடையை அணிந்திருந்தனர் (திருமுருகு: 198 -205) எனக் குரவையாடும் மகளிரின் ஒப்பனையை விவரிக்கிறது.

கல்கி தம்புதினத்தில் “குரவைக் கூத்து” ஆடும் பெண்கள் 9 பேர் மேடைக்கு வந்தார்கள். ஆட்டத்திற்குத் தக்கவாறு உடம்பை இறுக்கி ஆடை அணிந்து உடம்போடு ஒட்டிய ஆபரணங்களைப்

பூண்டு, கால்களில் சிலம்பு அணிந்து கண்ணி, கடம்பு, காந்தள் குறிஞ்சி, செவ்வலரி ஆகிய முருகனுக்கு உகந்த மலர்களை அவர்கள் சூடியிருந்தார்கள். மேற்கூறிய மலர்களினால் கதம்பமாகத் தொடுத்த ஒரு நீண்ட மலர் மாலையினால் ஒருவரையொருவர் பிணைத்துக் கொண்டவாறு அவர்கள் மேடையில் வந்து நின்றார்கள். சிலர் கைகளில் சந்தன மரத்தினால் செய்து வர்ணம் கொடுத்த அழகிய பச்சைக் கிளிகளை லாவகமாக ஏந்திக் கொண்டிருந்தார்கள். (பொன்னியின் செல்வன் ப-15) எனக் குரவையாடும் மகளிர் குறித்தும் அவர்களின் ஒப்பனை குறித்தும் எழுதியுள்ளார்.

**குரவையாடும் இடம்:**

வெண் மணல் பரப்பு குரவை கூத்தாட்டுக் களமாகப் பயன்பட்டதை “வெண் மணல் குரவை” (ஐங்: 181), “கொண்டல் இடுமணல் குரவை” (அகம்: 20)” ஆகிய சங்க பாடல்கள் வழி அறியலாம்.

கல்கி தம் புதினத்தில் குரவைக்கூத்து நடைபெற்ற இடத்தை இவ்வாறு விளக்குகிறார்: “வெண் மணல் விரித்த விசாலமான முற்றத்தில் குரவைக்கூத்து மேடை அமைக்கப்பட்டிருந்தது. மேடையில் கோழியைப் போலும், மயிலைப் போலும், அன்னத்தைப் போலும் சித்திரங்கள் போட்டு அலங்கரித்திருந்தார்கள் செந்நெல்லை வறுத்த வெள்ளிய பொரிகள், மஞ்சள் கலந்த தினையரிசிகள், பல நிற மலர்கள், குன்றி மணிகள் முதலியவற்றினாலும் அந்த மேடையை அழகுபடுத்தி இருந்தார்கள். .குத்துவிளக்குடன் தீவர்த்திகளும் சேர்ந்து எரிந்து இருளை விரட்ட முயன்றன. ஆனால் நறுமண அகில் புகையுடன் தீவர்த்திப் புகையும் சேர்ந்து மூடு பனியைப் போல் பரவி தீபங்களின் ஒளியை மங்கச் செய்தன... எனக் குரவையாடு களத்தை ஒரு சித்திரம் போல் காட்சிப்படுத்தி அக்களத்திற்கே வாசகர்களை அழைத்துச் செல்லும் நுட்பம் இன்புறத்தக்கது.

**குரவையின் பாடுபொருள்:**

“கூத்தின் விறலது குமரன் கூத்து” எனக் கூத்தநூல் தம் தொகை நூல் மரபினை எடுத்துரைக்கும் பொழுது குறிப்பிடுகிறது. (கூத்த நூல்: ப - 151). வீரர்களின் கடவுள் முருகன்; அவன் தேவ சேனாபதி; சோரநிட்டூரனைச் சூரனைக் காருடல் சோரி கக்கக், கூரகட்டாரி இட்டு ஓர் இமைப்போதினில் கொன்ற கொற்றவையின் கொற்றக் குமரன் (கந்தரலங்காரம்: பாடல் 4) என்றும், “வெற்றிவேல் போர்க் கொற்றவை சிறுவ” என்று பலவிதமாகப் பராவுகிறது திருமுருகாற்றுப்படை. (வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறை மீட்ட தீரவேல்,,,, திருமுரு: நேரிசை வெண்பாக்கள்).

இதற்கேற்ப பொன்னியின் செல்வனில் மகளிர் சபையோருக்கு வணக்கம் செலுத்திவிட்டு முருகனுடைய புகழ், வீரச்செயல், அசுர கணங்களைக் கொன்றமை, வெற்றிவேலன் திறம், அவனை மணந்து கொள்ளப் பலர் தவங்கிடக்கையில் வள்ளியை மணந்து கொண்டது, வேலவன் கருணைத்திறம் எனப்பலவற்றைக் கூறி குரவையாடியதாக எழுதுகிறார் கல்கி. இத்தகைய பாடலும் ஆடலும், பறையொலியும் குழல் ஒலியுமாகச் சேர்ந்து பார்த்திருந்தவர்களை எல்லாம் வெறிகொள்ளச் செய்தன

“பசியும் பிணியும் பகையும் அழிக
மலையும் வளமும் தனமும் பெறுக”

என்ற வாழ்த்துக்களுடன் குரவை கூத்து முடிந்தது என்று நிறைவு செய்கிறார் கல்கி (பொ. செ. ப-15)

**வேலனாட்டம்:**

குரவைக்கூத்திற்குப் பின் தேவராளன் தேவராட்டியின் வேலனாட்டம் நடைபெற்றதை எழுதுகிறார். உடுக்கின் ஒலி, தேவராளின் ஒப்பனை, நாட்டிய அசைவுகள், தேவராட்டியின் அச்சம், சந்நதம் வந்த தேவராளன் பலி கேட்கும் விதம் என "வேலன் வெறியாடலும்" பண்டைக் கால முறைமைக்கேற்பவே கல்கி எழுதியுள்ளார். மேற்கொண்டு வரும் பகுதிகளில் நடைபெற உள்ள நிகழ்ச்சிகளுக்குக் கட்டியங்கூறுதல் போல இப்பகுதி அமைந்துள்ளது.

**முடிவுரை:**

பொன்னியின் செல்வன் புதினத்தின் முதல் தொகுதியில் இடம் பெற்ற குரவைக் கூத்து எனும் சிறுகூறே இங்கு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

பண்டைய தமிழர் மரபிற்குச் சற்றும் குறைவு ஏற்படாத வகையில் இப்பகுதியினை கல்கி எழுதியிருப்பது நிறுவப்பட்டுள்ளது. இதன் வழி எழுத்தாளர் அவர்களின் இலக்கியப் புலமை புலனாகின்றது.

புதினத்தை வெறும் புனைவாகக் கருதாமல் புதினத்தில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு பகுதியையும் தம் இலக்கியப் புலமையால், வரலாற்று ஆதாரம், கதாபாத்திரங்களைச் செதுக்கி உள்ள நுட்பம், கூர்ந்த மதிநுட்பம், இயற்கைச் சூழல், வர்ணனை என ஒவ்வொரு விடயத்தையும் மிகக் கூர்மையாகச் சிந்தித்து எழுதி உள்ளதாலேயே காலத்தைக் கடந்து நிற்கும் காவியமாகப் பொன்னியின் செல்வன் போற்றப்படுகின்றது.

ஒவ்வொரு பாத்திரங்களையும் படைத்துள்ள விதம், புதினத்தில் இடம்பெற்றுள்ள இலக்கியச் செய்திகள் வரலாற்றுச் செய்திகள், சூழலியல் செய்திகள், கட்டிடத் தொழில்நுட்பம், மரக்கலப் புலமை, தமிழரின் பண்பாட்டு சார் செய்திகள் எனப் பல கூறுகளை விரிவான ஆய்வுக்கு உட்படுத்தும் களமாக இப்பதினம் அமைகின்றது.

**துணை நூல் பட்டியல்**

**கருவி நூல்:**

பொன்னியின் செல்வன் (தொகுதி 1) அமரர் கல்கி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., ஏழாம் பதிப்பு 2021, சென்னை.

**பார்வை நூல்கள்:**

1. அடியார்க்கு நல்லார் உரைத்திறன் ச. வே சுப்பிரமணியன், மெய்யப்பன் பதிப்பகம், 2010, சென்னை.

2. அபிதான சிந்தாமணி, (செம்பதிப்பு) (பதி) எஸ். கௌமாரீஸ்வரி, சீதை பதிப்பகம், டிசம்பர் 2004, சென்னை.

3. சாத்தனார் அருளிச் செய்த கூத்தநூல், ச.து.சு.யோகியார் பொழிப்புரை, (பதி) மே.வீ. வேணுகோபால் பிள்ளை, தமிழ்நாட்டுச் சங்கீத நாடக சங்கம், மத்திய சங்கீத நாடக அகாடமி, செப்டம்பர் 1968, சென்னை.

4. சிலப்பதிகார மூலமும் அரும்பத உரையும் அடியார்க்கு நல்லார் உரையும் உ வே சா பதிப்பு, டாக்டர் உ.வே.சா நூல் நிலையம், 2008, சென்னை

5. சேறை அறிவனார் இயற்றிய பஞ்ச மரபு, வீ.ப.க சுந்தரனார் விருத்தியுரை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1993, திருநெல்வேலி.

6. தமிழர் இசை, ஏ. என். பெருமாள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், அக்டோபர் 1984, சென்னை.